# தமிழ் மகள் தந்த செய்தி!

அல்லது

# சிறையில் யான் கண்ட கனவு

சி. ந. அண்ணாதுரை

கிடைக்குமிடம் :

**கோ. கிருஷ்ணசாமி,**

133, லாங்கு பஜார்,

வேலூர்.

இனிய தமிழ் வாழ்க!   எங்குந் தமிழரசு சூழ்க!!

# தமிழ் மகள் தந்த செய்தி

அல்லது

## சிறையில் யான் கண்ட கனவு!

ஓர் இனிய தமிழ்க்கவி நூல்

ஆக்கியது:

குடியேற்றம்: மு. அண்ணல்தங்கோ

# MESSAGE OF TAMIL MAGAL

OR

## MY DREAM AT PRISON!

A TAMIL POETRY

by G. M. ANNALTHANGO

1939

உரிமை எழுத்தாளருடையது]

[விலை அணா 6

# தமிழ்த் திருநாள்

# (பொங்கல்) வாழ்த்து

௧. இனிய தமிழ் வாழ்க வெனப் பொங்குக பொங்கல்!
இந்தி மொழி வீழ்க வெனப் பொங்குக பொங்கல்!
தனிமனிதன் திமிரொழியப் பொங்குக பொங்கல்!
தருப்பைப் புல்லாட்சி கெடப் பொங்குக பொங்கல்!

௨. கனிமொழியாம் தமிழ் முழங்கப் பொங்குக பொங்கல்!
கயவர்கள் தம் மாட்சி கெடப் பொங்குக பொங்கல்!
இனியடிமை இல்லை யெனப் பொங்குக பொங்கல்!
இடர் புரிவோர் மடிந்தொழியப் பொங்குக பொங்கல்!

௩. தமிழர் விடு தலை யடையப் பொங்குக பொங்கல்!
தமிழ் உலகில் வெற்றிகொளப் பொங்குக பொங்கல்!
தமிழ் நாடு தமிழர்க்கெனப் பொங்குக பொங்கல்!
தன்னுணர்வு ஓங்க வெனப் பொங்குக பொங்கல்!

௪. அமுது மொழிப் பெண்ணுடைமை உரிமை கொள்ள
ஆண்மக்கள் ஆண்மை பெறப் பொங்குக பொங்கல்!
இமய மலை மீது தமிழ்க் கொடி ஏறி—
எங்கள் தமி ழரசுயரப் பொங்குக பொங்கல்!

௫. இயற்கை தரும் நல்லுணவை மக்கள் கொள்ள
இருநிலத்தில் உழவு தொழில் பெருகித் துள்ள
நய மான பலதொழில்கள் நாட்டிலே பல்க
நந்தமிழர் வணிகம் உல கெங்குமே செல்ல

௬. செய லாற்றுந் திறன் வளரச் செல்வம் வளர
செந்தமிழ்நன் மக்கள் நலம் பெற்று உயர
அயலார்கள் சூழ்ச்சி கெடப் பொங்குக பொங்கல்!
அடிமை கெட அறிவுவரப் பொங்குக பொங்கல்!

## இயற்கைக்கவிஞராயிறு-புதுவைப்புதுமைக்கவி தோழர் பாரதிதாசன் அவர்கள் அன்புகூர்ந்தளித்த சிறப்புரைப்பா

### விருத்தம்

1 நந்தமிழ் நாட்டு மக்கள் நலமெய்தி வாழ்வ தற்குச்
செந்தமிழ் ஓங்க வேண்டும்; செறுபகை வீழ வேண்டும்;
இந்தியைக் கட்டாயத்தால் ஏற்படுத்திட நினைத்தோர்
மந்திபோல் விழிகள் வைக்க, மறுத்ததை ஒழிக்க வேண்டும்,

2 தமிழர்கள் நாட்டில் வேற்றோர் தலைமைகொள் ளுவது தீமை,
தமிழரைத் தமிழர் ஆள்க' என்பன தமிழ வீரன்:
அமுதுநேர் மொழியான் அண்ணல் தங்கோவின் எண்ணமாகும்,
அமைதிசேர் நல்லோன் கொண்ட அன்புசேர் கொள்கை கண்டீர்!

3 கருத்தறிந்திட்ட நாளாய்க் கணந்தொறும் தமிழர் [தம்மைத்
திருத்தவும் அன்னோர் வாழ்விற் செம்மை சேர்த்திடவும் எண்ணிப்
பெருத்த தொண்டிழைப்போன் நல்ல பெரும் பெரும் செயல்கள் செய்வோன்
பொருத்தமாம் குணங்கள், கல்வி, பொறையெலாம் அமைந்தோன் கண்டீர்

4 அரசினர் சிறைப்படுத்த அதனையும் தமிழர்க்காகப்
பரிசெனக் கொண்ட மேலோன், பன்னாட்பின் வெளியில் வந்தும்
முரசினை முழக்கி வெற்றி 'மேவுக தமிழர்!' என்னும்
பெரியதோர் மனத்தான்! அன்னோன் நூலொன்று பேசலுற்றான்

5 "தமிழ் மகள் தந்த செய்தி" தன்னைநந் தமிழரெல்லாம்
தமதென அமுதமென்னத் தாங்கி வாசித்தல் வேண்டும்,
அமைவுற வாசித்துப்பின் அதுசொலும் வண்ணமாக
இமையளவும் வழாமே இயற்றவும் வேண்டும் நன்றே.

வழிநிலை: சென்னை,
9—1—1939.

**பாரதிதாசன்**, புதுவை.

ஒன்றித்தமிழர் வாழ்க !　　உரிமை அரசு சூழ்க !
என்றும் தமிழ் மொழி வாழ்க !

## முன்னுரை

அன்பிற்குரிய-நட்புக்கினிய தமிழ் மக்களே! தமிழ் இளம் பெண்மணிகளே! தமிழ் இளைஞர்களே!

இன்று தங்கள் அழகிய செய்ய கையில் வந்துள்ள இனிய தமிழ்ச் சொற்களாலாய "தமிழ் மகள் தந்த செய்தி" என்னும் இந்நூல், என்னால் வெளியிடப்பெற்றுள்ள "அறிவுக் காசி வெளியீ"ட்டில் இரண்டாவது மலராகும். ஆனால், இந்நூல், யான் 1927 மாண்டில் சென்னை மலைச் சாலையிலிருந்த நீல் சிலையை அகற்றவேண்டித் தலைமை ஏற்று நடத்திய மறுப்புச் செயலின் பொருட்டு சேர நன்னாட்டிலுள்ள கண்ணனூரில் மூன்றாவது முறையாக ஓராண்டு சிறை கிடந்த காலை ஒருவாறு தமிழ் மொழி நலம், தமிழர் நலம் நாடிப் பல கால் எண்ணியெண்ணி வருந்திய உள்ளத்தவனாய்ச் சிறையறையில் கருதிய கருத்துக்களின்-பாடிய பாட்டுக்களின் தொகுப்பேயாகும். ஆயினும், இதனிடைக் காலத்தே தாய்மொழியன்பாலும், அறிவாலும், என்பாலும் நாட்டிலும், மக்களிடத்தும்-குறிப்பாகத் தமிழரிடத்தும்-முக்கியமாகத் தமிழ்ப் பெண்மணிகளிடத்தும் நேர்ந்த-எழுந்த-நேர்ந்து வரும்-நடந்துவரும் மாற்றங்களின் கிளர்ச்சி யெழுச்சிகளின் உணர்ச்சிகளைக் கொண்டதாகும் இந்நூல் என்றால் அது மிகையாகாது.

ஆனால், இந்நூல் வந்துள்ள வழியையும் ஆக்கப்பட்டுள்ள முறையையும்பற்றிச் சிறிது செப்புதல் எனது கடமையாகிறது. ஓர் இளந் தமிழ் மகன் தனது நாட்டு நலம் நாடிச் சிறையிருந்த காலை-உள்ளம் கவலைகொண்டபோழ்து, இரவிற் கண்ட கனவிலே தோன்றிய ஓர் இளந் தமிழ்ப் பெண்ணின் இளமை அழகில்-இனிய அழகு தவழும் தோற்றத்தில்-அவளது பெண்மையில் ஈடுபட்டுத் தன்னன்புடையார்வத்தை அறிவித்து அத் தமிழ்மகளின் உள்ளக்கிடக்கையை கெஞ்சிக் கேட்டதும், அப்

பெண்ணரசி அத்தமிழ் மகனிடம் நடந்துகொண்ட விதமும், நவின்றுகொண்ட உரைகளும் கொண்டதே இந்நூல் வந்தவழியாகும். அச்செந்தமிழ்ப் பெண்மணியின் நடையையும் நல்லுரைகளையும் இசைகளுடன் கூடிய பாக்களாக ஆக்கப்பட்டுள்ளதே இந்நூலின் முறையாகும். இவ்வழியும் முறையும் தமிழராகிய நமக்குப் புதியவை யல்லவாயினும், அவை பண்டைக்காலத்தவையாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டமையால், பாட்டென்றால்-கவிகள், செய்யுள் என்றால் நமது தமிழ் மக்கள், காங்கிரஸ்காரர்கள் 1935 வதாமாண்டு சீர்திருத்தத்தைத் தொட்டாலும் கை நாறும், புகன்றாலும் வாய் நாறும் என்று கூறினார்களே (இன்று "அச்சீர்திருத்தம் கனிநல்லது; ஆங்கில மக்கள் மிக நல்லவர்" என்று புகன்று ஆச்சாரி போன்ற ஆங்கில "விரோதிகள்" கவர்னர்களுக்குத் தாசத்துவம் பாடுகின்றனர்!) அது போலக் கைப்பெனக் கருதுகிறார்கள். அது அவர்களது குற்றமல்ல. ஆரியால் நம்மவர் கல்வியுணர்வு-கவிப்பேறு பெறவிடாமல் ஆரியக் கதைகளைக் கேட்டாலே போதும், படிக்கவேண்டாமென்று நம்புமாறு செய்யப்பட்டுவிட்டனர், அடிமையாக்கப்பட்டனர் அல்லவா?

இவ்வடிமை நிலையைத் தமிழர் மாற்றிக்கொள்ள வேண்டுமா? வேண்டாமா? இனித் தமிழ் மொழியும், தமிழர்களும் உலகில் வாழ்வதா? வீழ்வதா? முன்னேறுவதா? தமிழர் அடிமை தீர்ந்து ஆண் மக்களாகி-உரிமையுடையவர்களாவார்களா? என்னுங் கேள்விகள்தாம் தமிழ் மகள் தமிழருக்குத் தந்த செய்தியாகும். எனவே இவைக்குத் தமிழர்கள் குறிப்பாகத் தமிழ் இளம் பெண்மணிகள் தமிழ் இளைஞர்கள்தாம் தங்கள் தன்னுணர்ச்சிச் செயல்கள் வாயிலாக இந்நூலுக்கு-தமிழ் மகளுக்கு நல்ல விடை நல்கக் கடமைப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் யர்து செய்வரோ? இந்நூல் தோன்றத் துணை செய்த தோழர்களான இபற்கைக் கவிஞாயிறு புதுவைப் புதுமைக் கவி பாரதிதாசன், காஞ்சி மணிமொழியார், டாக்டர் தருமாம்பாள், செல்வராஜ், டாக்டர் சிற்சபை, கலைமகள் முதலிய என தன்பிற்குரிய-நட்புக்கினிய தமிழ் மக்களுக்கு என்றுங் குன்றா நன்றியுடையவனாகின்றேன்.

## செலுத்துதல்

இந்நூலைத் தமிழ்மொழி-தமிழர் நலம் நாடித் தமிழ்க்காப்புப் போர் புரிந்தும் சிறை கிடந்தும் தமிழ்க்கொடி பிடித்து வெற்றி முரசடித்துத் தன்னுணர்வு கொண்டு தமிழாக்கப் பணி யாற்றும் பால் மணம் மாறாச் செந்தமிழ் மங்கை, இளங்கோ, ராஜம்மாள், ஈ. வெ. ரா. ஆகிய சிறியார் முதல் பெரியார் வரை, ஏழைத் தமிழன் முதல் செந்தமிழ்ச் செல்வர் செட்டி நாட்டு இளவரசர் வரை ஒரு முகமெனப் புத்துணர்ச்சிகொண்டு கிளம்பியுள்ள இன்றைப் புதுத் தமிழருக்கு இந்நூல் காணிக்கையாகச் செலுத்தப் படுகிறது என்பதைப் பணிவன் புண்மை நன்றியுடன் அறிவித்துக்கொள்கிறேன். நவையுளதேல் புவிபொறுத்துணர்த்தி உயர்த்துமாக.

வாழ்க தமிழ் மொழி! வீழ்க ஆரியர் சூழ்ச்சி!!

தமிழ்நாடு தமிழருக்கே!!!

இங்ஙனம்,

வேலூர்
12—1—1939

தமிழ்மொழி - தமிழர் நலம் நாடிநிற்கும்
தங்களன்பிற்குரிய - நட்புக்கினிய
குடியேற்றம்:மு. அண்ணல்தங்கோ.

---

## பிழைதிருத்தம்

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 19 | 54 | 2 | நல்வீடுகள் பார்க்கும் | நல்வீடுகள் யார்க்கும் |
| 29 | 4 | 4 | பெர்றுப் ளாட்சிக்குப் | பொறுப்பாட்சிக் குப் |
| 32 | 77 | 11 | இவைபுனே | இவை |
| 7 | கோட்டின் கீழ். | | ஏழுவயதுப்பெண் | பெண்குழந்தை |
| | ,, | | பெண்குழந்தை | பெண் |

# தமிழ் மகள் தந்த செய்தி!

அல்லது

# சிறையில் யான் கண்ட கனவு!

---

"பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப் புறங்கொண்டு போவதற்கே" என்னும் இசையில் பாடுக.

கண்ணிகள்

மணி - அஞ்சு மாகாமுன்னம் சோறு கொடுத்தெனை
அடைத்தனர் சிறையில்!—அன்று
நெஞ்ச மொருவித கவலை கொண்டதால்
நினைந்தனன் பலவே!—என்றுந்
துஞ்சிடுங் காலமும் போயதுபின்னும்
துணைமணியு மாச்சு!—ஆயினும்
துஞ்சிடச் சிந்தை இடந்தரவில்லை!
தூக்கமும் வாய்க்கவில்லை! (1)

மீண்டுங் - கொஞ்ச நேரமிந்தத் துன்பமடைந்ததுங்
கூடியதே உறக்கம்!—பின்னர்த்
துஞ்சினேன் நள்ளிரவாக விருக்கலாம்
தோன்றிய தோர் கனவே!—அது
வஞ்சனை இன்றிப் பிரிவினையின்றியே
மக்களெல்லோரும் ஒன்றாய்க்—கூறும்!
சஞ்சல மின்றியே வாழும் ரஷியத்
தலைநகர் மாஸ்க்கோவே! (2)

வெள்ளைக் - கஞ்சமலர் நிகர் முகப்பெண்மணிகள்
களிக்கும் லண்டனோதான்!—"ஏழ்மை
பஞ்சமுண்டோ?" வென நினைக்கச் செய்திடும்
பாரிசுப் பட்டினமோ!—அன்றி
கொஞ்சம் மாறுதலாய் மக்கள் வாழ வழி!
கூறும் நியூயார்க்கோ'!—பம்பாய்
மஞ்சு கல்கத்தா சென்னையை மானுமூர்
மாமணி மண்டபத்தே! (3)

மேல்நிலைப் - பஞ்சணை மீது படுத்திருந்தே னங்கோர்
வஞ்சிவந் தோடி நின்றாள்!—அவள்
மிஞ்சிய பொலிவில் ஈடுபட்டே அங்கு
"தஞ்சம்" எனப் பணிந்தே—மிகக்
கெஞ்சி, "அணைந்தளி பைங்கிளியே!" எனக்
கிட்டி நெருங்கி நின்றேன்—எனைக்
கொஞ்சி அணைந்தொரு முத்தமிட்டாள் அது
கோடி பொன்கள் பெறுமே! (4)

"தமிழ்ச்- செஞ்சொலிளங்குயிற் பெண்ணரசே! இனி
சேர்ந்திரு பேருமொன்றாய்ப்—பிர
பஞ்சத்தி வில்லற மாற்றிடுவோம்" எனப்
பரிந்து நிற்கையிலே!—அவள்
கஞ்சமலர் முக மீதினிலே பெருங்
கருமை தோன்றியதே!—அதைக்
கொஞ்சமுந் தோற்ற விடாதங்கொளி செய்
குறுநகை கொண்டனளே! (5)

சற்றும் - வஞ்சமில்லாள்! உளம் பளிங்கனையாள்!
மணக்கும் மெல்லுடலாள்!—அன்பில்
கொஞ்சுந் தமிழ்மொழித் தேனுடையாள்!—மிகக்
கூரறிவுச் சுடராள்!—இனிப்

பஞ்சமில்லை, என்றனில்லத்திலே இந்தப்
பைந்தமிழ்ப் பெண் வந்ததால்!—என
அஞ்சாதுரை செய, எழில் நகை தவழ்,
அழகிய முகத்தாள்! (6)

அவள் - கன்னல் மொழியும், கருமை விழிகளும்,
கனிச்சுவை இதழும்,—நுதலும்
இன்னமுது தரும் பொற்கலையங்களும்
நுண்ணிடையுங் குழலும்—செய்த
புன்னகையும், என்னைக் கொள்ளை கொண்டன!
புகுந்ததுயிர் அவள் பால்!—அந்த
நன்னிலப் பெண்ணை, யடைந்தின் புறுகின்ற
நாளே உயிர் வரும் நாள்! (7)

பெண்மை - சொன்னதைச் சொல்ல மறந்தேனவள்பால்
சொக்கிய அன்புணர்வால்!—அவள்
இன்னல் களைந்து நல்லெண்ணம் பயன்பட
இந்நிலம் செய்திடுமோ?—ஆ!
என்ன புகன்றீர்! இளந்தமிழ! நிலை
யாதும் அறியார் போல்!—அடிமைக்
கின்பம் உண்டோ? அந்த "இல்லற வாழ்க்கையில்"
இயம்பும் "ஆண்மை" யுண்டோ? (8)

இங்கு - பன்னெடு நாட்களாய்ப் பைந்தமிழ் நாடு
படுந்துயர் காணீரோ?—தமிழ்
மன்னரெல்லாம் அவட்கின்னல் செய்து வாழும்
"வாழ்க்கை"யைக் காணீரோ?—ஆ!
முன்னர் தமிழன்னை வாழ்ந்த சிறப்பும்
முறை வழுவா அரசும்!—நம்மால்
உன்ன முடியுமோ பன்னவியலுமோ
ஒப்பில்லாத அவள் சீர்! (9)

நறும் - செந்நெற் கழனிகள் சூழ்ந்திடுந் தோற்றம்!
சிந்தைக்குண வளிக்கும்!—முதிருங்
கன்னற் கணுக்கள் விலை உயர்ந்த பெரும்
முத்துக்களைக் குவிக்கும்!—எங்குந்
தன்னேரிலாப் பொழில் வண்டினம் பாடத்
தங்கமயில் நடிக்கும்!—வயற்
கன்னிகள் பாடுங் குரவைப்பா உள்ளக்
கவலைக ளறுக்கும்! (10)

ஊர் - வீதிகள் தோறுமார் செந்தமிழ்ப் பள்ளியும்!
வீரர் பயில் மனையும்!—தூய
நீதிநெறி தவறாப் பெரியோர்கள்
நித்தமும் ஓம்புகின்ற—அறம்
கோதறு நல்லொழுக்க முயர் கல்வியும்!
குறைவிலா வறிவார்—பெண்கள்
ஓதிடுந் தண்டமிழ் மொழியின் சிறப்பும்!
ஒன்றிய நல்வாழ்வும்! (11)

கேட்டுக் - காது களித்த தமையாது, தங்கள்
கண்கள் களித்திடவும்—தமிழ்
மாது அளிக்கின்ற இன்பச் சுவைதனை
மகிழ்ந்து துய்த்திடவும்!—பல
சூது வழிகளில் "தொண்டர்" கோலங்களில்
தோன்றிடுவார் களிக்க!— அந்த
மாதிருநாட்களின் மாண்பை உரைசெய்ய
வல்லவள் நானலவே! (12)

நலக் - கோதுள மற்றைய கண்டத்தவர் தங்
கோதைய கற்றிடவும்!—உடல்
வேதனை நீக்கவும் உணவோடுடையும்
வேண்டியவை பெறவும்!— தூய

மாதர்களன்பர்கள் ஓதிடும் செந்நெறி
வாழ்வடைந் துயரவும்!—நல்ல
கோதையர் பரிகள் பொருள்கள் இறையாய்க்
கொண்டுவந்து கொடுத்தே! (13)

" எம்மை - யாதரி பைந்தமி ழாயி! வணக்க " மென்
றனுதினம் பணிவார்!—அவர் தம்
பாதகத்தோடு வறுமைப் பிணியும்
பறந்திடக் கடிந்தே!—உளப்
பேதைமை யறவும், போத மெய்யுறவும்
புத்தறிவு கொடுத்தே!—அன்போ
டாதரிப்பாளன்னை தஞ்சமடைந்தோரை
அளித்தமிழ் மொழியால்! (14)

அன்ப! - இங்ஙனம் பற்பல ஊழிகளைத்தாய்
இன்பமாகக் கழித்தாள்!—ஒரு
பங்கமுமின்றிதன் மக்கள் களிப்புறப்
பயன் பல வளித்தாள்!—அவை
எங்ஙனம் என்னுடை நாவிலடங்கிடும்
எடுத்தியம்பிடவே!—சென்ற
மங்கல நாட்களின் வாழ்வைச் சிதைத்தவர்
வன் னெஞ்சம் மாளாதோ? (15)

நாட்டின் - துங்க உயர்ச்சியுந் தொன்மைப் பெருமையும்
தொடர்ந்த நல்வாழ்வும்—கண்டு
அங்கம் களித்திதை யடைந்திடப்பெரும்
ஆவலுளத்தவராய்—இங்கு
தங்க இடமொடு தவிசும் பெற்றிடத்
தவமியற்றி வந்தார்—பிற
மங்கையர் பயந்த தீயர்கள் தீய
மனத்துணி வோடே! (16)

தங்கும் - மங்கல வாழ்வாலும் மல்கும் புகழாலும்
மமதை கொண்டவராய்!—ஈண்டு
நங்குழுவிற்பலர் புரிந்தகொடிய
நடத்தைகள் கொஞ்சமோ?—வந்த
தங்கள் நலத்தையுந் தவறுளத்தையுந்
தழுவி யன்பில ராய்க் - "கல்வி
மங்கையர் பயிலல் முறையல்ல வென"
மறுக்க ஒப்பினரே (17)

"காளைச் - சிங்கங்கள் பார்ப்பனர் கற்கத் தகு"மெனச்
செப்பிநற் பெண்மை தனை!—இங்கு
தங்கவிலங்கிட்டு வீட்டிலடைத்தனர்
தாயை இழிவு செய்வோர்!—தமிழ்ப்
புங்கவர் நூற்கள்! இதற்கெதிராகப்
போர்புரிதலைக் கண்டு—அவை
மங்கிடச் சமயக்கொள்கையைப் புகுத்தி
மதி மயக்கினரே! (18)

தமிழ்ச் - "சாதி" வகுப்பையும் நீதி வகுப்பையும்
சற்று மறிந்திலராய்ப்—பல
"சாதிப்" பிரிவினை உண்டு பண்ணிமிக
சச்சர வேற்படுத்தி!—இங்கே
ஆதியில் நடந்த முறைகள் யாவையும்
அகற்றிப் பாழ்படுத்தித்-தீய
பாதக வாழ்க்கையை நாட்டில் நிறுத்தினர்
பண்பற்ற மாக்களையோ! (19)

மற்றும் - "சோதரராகிய பழந்தமிழரைத்
தொடத்தகா" தெனவே!—புது
நீதி வகுத்தனர், ஏதம்புகுத்தினர்,
நெஞ்சினில் நஞ்சுடையார்!—மறை

ஓதிடினும் 'மறை' ஓதாவிடினும் முன்
ஓதினவர்கள் மக்கள்!—பண்டை
வேதிய ரென்றே விளம்பிட வேண்டுமாம்!
விந்தை! விந்தை!! இதுவே!!! (20)

தமிழ்க் - 'காதல் மணத்தையும் களவியலையும்'
காண உணர்விலராய்த்—தீய
*பேதைப்†பெதும்பை மணத்தை—இந்நாட்டினில்
பெருக்க நூல் செய்தனர்—"இதற்
காதாரம் 'வேதம்' "மத" மெனப் பொய்யா
யறைந்து மக்கள் தமைத்—தங்கள்
சூதுக்கிலக்காய் வளைத்துக் கொண்டனர்
சொந்த நல முடையார்! (21)

வழி - ஏது மறியாத சிறு பெண் குழந்தை
இல்லறம் நடத்துமா? கிழத்
தோதகர் மகிழப் பெண்களை விற்பது
'சுருதி'ப் பொருத்தமா?—உயிர்த்
தாது குறைந்த மனிதனானாலும்
தனம் வந்தாற் போதும்!—இந்த
ஏதம் நிறைந்த கொடியவர் வாழ்க்கை
என்று அழிந்திடுமோ!!! (22)

தமிழ் - ஆண்மகனிடத்தி லாண்மையில்லையானால்
அரை வீசை மீசை!—முறுக்காய்க்
காண்பதனாற் பயன் என்ன சொல்வீரென்
காதற்றமிழ் மகனே!—ஆண்மை
பேணுவதில்லை! தீரமுமில்லை!
பேச்சோ வெறும் பேச்சு!—சும்மா
வீண்டம்பங் கொண்டிங்கு செய்யும் ஆரவார
வேடிக்கை வாழ்வாச்சு! (23)

---

* பேதை—அறியாத் தன்மையுடைய ஏழு வயதுப் பெண்

† பெதும்பை—பதினொரு ஆண்டு சென்ற பெண் குழந்தை.

வந்த - ஆணுக்குப் பெண்மகள் இளப்ப மென்ற ஓர்
அறியாமை யாலே!—கற்
றாணை நிகர்த்த நற் றேளுடையாண்மகன்
தோன்ற லரிதாச்சு!—நாட்டைக்
காணவருவோரும், உய்யவருவோரும்
கட்டியாள லாச்சு!—உரிமை
மாண்புபண் பாண்மை யாற்றல் நம்மவர்க்கு
மருந்துக்கும் முட்டாச்சு! (24)

கண் - காண்டகும் செந்தமிழ்க் காளையர் செய்கின்ற
கத்திச்சண்டை ஒலியால்!—நல்ல
'ஆண்டகைச்சீயங்கள்' வெம்புலி யினங்கள்
அஞ்சிப் பறக்கும் மென்பார்!—கற்பில்
மாண்ட கண்ணகிக்குச் சிலை கொணர்ந்திட
மாப்பெரும்போர் புரிந்து!—இமய
மாண்ட ‡ செங்குட்டுவன் போலோர் தமிழனே!
அன்பனே! காண்போமோ! (25)

நல்ல - வாணுதற் பெண்கள்தம் பேரறிவைத் தினம்
வளர்த்தல் குறையவே!—வெறும்
ஊணுக்கும் உடைக்கும் நகைக்குந் துய்த்திடும்
உடலின் பத்தினுக்கும்—கண்ணிற்
காணுஞ்சிறு சிறு தோற்றங்களுக்கும்
காட்சியிலாதவைக்கும்-மன்னர்
பூணத்தகுந்தமிழ்ப் பெண்மகளடிமை
போய் மிகக் கெட்டனளே! (26)

இன்பச் - சிறப்புறு தமிழ்ச் சொற்றொடராலே
செம்மை கல்வி ஒழுக்கம்!—சாதி
மறுப்பு, மன்பதைத் தொண்டு தன் கடமை
மனையறம் வளர்க்கும்!—தூய

---

‡ சேரநாட்டை யாண்ட வீரத்தமிழ் மன்னர் மன்னன்.

நறுப்பழ நெறி தமை எல்லோரும்
நாடிக் கற்றுயர!—நாளும்
குறிப்பளி தமிழ் நூல் நல்கிக்கூழ்
குடித்துத் தமிழ்த் தொண்டே (27)

செய்து - பிறப்பின் பயனைப் பெற்ற அவ்வைகுறள்!
பேறளித்த வள்ளுவர்!—இன்றே
இறப்பினுந் தமிழ் வளர்ச்சியே பெரி
தென்று பணி புரிந்த—மற
†விறப்படைத்தமிழ்! மன்னவர் புலவர்
வெற்றிப் பொருள் பேறெல்லாம்!—தந்து
மறப்பருந் தமிழ்த்தொண்டு இயற்றிய
மக்களெங்கே இளங்கோ (28)

ஒத்த - மாண்புடைப்புலவர் புகழ்ந்து பேணிய
மாணிக்கச் செந்தமிழைக்!—கற்று
ஆண்மை யொடு "சிவன்" தன்னை எதிர்த்திடும்
அண்ணல் நக்கீர ரெங்கே?—அன்று
ஊணுறக்க மின்றி கலிங்க நாட்டினில்
ஒன்றிய போர் புரிந்து—தமிழ்
மாணவர் மறவர் வெற்றியை நாட்டிய
‡மள்ளத் தமிழ ரெங்கே? (29)

காலம் - வீணுகும் "மோட்ச" மெனும் வீடும் மற்றிங்கு
வேறின்பம் யாதும் வேண்டேன்!—இயல்
வாணர் மகிழ்ந்து மகிழ்ந்து பயின்றிடும்
வண்ணத் தமிழ் மொழியின்—சுவை,
ஊணொளியா மென தின்னுடலுக்கர
சோங்குந் தமிழ் மொழிக்கே!-கேட்டுக்
காணுமின்பத்துக் குயிரை யீவே னெனக்
காட்டிய நந்தி எங்கே (30)

---

† விறப்பு-வெற்றி

‡ மள்ளம்-வீரம்!

இவை யெல்லாம் நீங்கள் அறிவீர்கள். ஆகலின் என் அன்புடைத் தமிழரே!—துணைவரே! இது குறித்துத் தங்களுக்கு,

நொண்டிச்சிந்து

(31) இன்னமுஞ் சொல்ல வேண்டுமோ?—காதல் மணியே!
என்தமிழர் செல்வமெல்லாங் கொள்ளை போகுதே!
பன்னுமதங் 'கடவுள்' 'கோயில்'—பேராலிங்குப்
பாட்டாளி மக்கள் செந்நீர் பாய்ச்சப்படுதே!
கன்னல் மொழி ‡ ஊறின்மை என்று—விளம்பராம்
காந்திப் பெயரைச் சொல்லி மழுப்பிக்கொண்டு
அன்னியர்கள் நமதுழைப்பைக்—கொள்ளைபுரிந்து
அடிமையாய்த் தமிழரை ஆளுகின்றார்! (இன்ன)

(32) பன்னமுடியாத துன்பங்கள்—நம்மவர்கட்குப்
பகுத்தறி வின்மையினால் வந்து நேர்ந்தன!
அன்னியர்கள் செய்யுஞ்சூழ்ச்சிக்-குடனிருந்து
அறிவின்றித் தமிழர் கிடப்ப தேச்சு!
இன்னல் கடற் கெல்லையோ இல்லை!—தமிழ்மொழியை
இந்தி சூறை யாடுதற்குத் தடையோ இல்லை
மன்னவனே தமிழ் மகனே!—இத்தகையநும்
மதிகெட்ட வாழ்க்கைக்கு மணிவி ஒன்று? (இன்ன)

(33) "நாகரிக வாழ்க்கை" என்று—பார்ப்பனர்களின்
நாவினிக்க நல்லுணவு நாளுமளிப்பார்!
'நாகரிகக் கல்வி' பயின்றோர்! எந்தக்குருட்டு
நாட்டு அறிஞரிதை ஏற்றுக் கொள்வார்?
காக முண்ணும் போழ்தினிலே!—தம்மினந்தனைக்
"காகா" வென் றழைத்துப் பின்னர் புசிக்கும்
ஆ! கா! என்ன புகல்வேன்!—சற்சூத்திராம்
ஆரிய ரடிமைகள் செய்யும் நடத்தை! (இன்ன)

---

‡ ஊறின்மை—துன்புறுத்தாமை, ஊறுசெய்யாமை

(34) நோசாமல் பிறருழைப்பைப்—பறித்து சற்றும்
நோகாத சாதியினர்க் கிறை கொடுப்பார்!
வாகான தம்மினத்தவர்-வறுமைதனில்
வாடிக்கிடப்பதைக் கண்டிழிவு சொல்வார்
பாகாகப் பேசுந்தமிழர்!—இத்தகையவர்
பயங்கொள்ளித்தனத்துக்குப் பெருமை என்னே!
சாகாதோ "சாதி நெஞ்சம்" என்று வருந்தி
சாகாதுழைக்கும் மக்கள் அழுதுரைப்பார்! (இன்ன)

(35) அன்ன மென்றுங் கிளியே என்றும்,—எனதினிய
ஆசைக் காதலி உயிர் நீயே என்றும்
தன்மனேவியுடன் மகிழ்ந்து—பஞ்சணை தனில்
தானிரவு இன்பந்துய்த்துக் களித்திருக்க
சின்னப்பையன் முனியனுடன்!—நள்ளிரவினில்
சேந்தலையன் முருகன் வயலில் திரிந்து
பன்னுந் தண்ணீர் பாய்ச்சிடுவான்—மற்றுமவனே
பனி, குளிர், வெயில், மழை பார்த்ததுண்டோ? (இன்ன

(36) நன்றியுடன் உணவளிக்கும்!—இப்புகலரும்
நல்ல குல மக்களை நா மேதுசெய்கின்றோம்!
ஒன்றிடாதே எட்டிநில்லடா! எங்களுடைய
ஊர்த்தெருவில் வாராதே! உள் நுழையாதே!
என்றியம்பி நோக வைக்கின்றோம்!—ஆனல் உலகில்
எல்லோரும் கீழ்மக்கள் யாங்கள் உயர்ந்தோர்
என்று நம்மை இழிவு செய்துப்!—பிழைப்பவர்க்கு
'ஏன்சாமி! தண்டமென்று' எல்லாங்கொடுப்போம்! (இன்

(37) பொன்னெளி மணிமுத்தெனவே!-தமிழர்புவி
போற்றி விழா செய்து புகழ் பாடத்தகுந்த
மின்னெளித் தமிழரசிகள்!-தூயநன்மணி
மேகலை கண்ணகியர்க்குச் சிறப்பு உண்டா?

அன்னியப் பாஞ்சாலப் பெண்ணுக்கும்மற்றவர்கட்கும்
ஆயிரங் கோயில்கள் கட்டி விழா செய்யுவோம்!
உன்னவும் உளமுடையுதே!-தமிழர் நிலை
உயிருள்ள மக்கள் நிலை யாமோ? உரைப்பீர்! (இன்ன)

(38) தன்னிடத்தில் நம்பிக்கை இல்லை!-தாய்த் தமிழைத்
தன்மதிப்பைத் தம்மவரைப் பேணுதலில்லை!
பன்னுவதோ பெரும் பாட்டு—அதனுடைய
பகரும் பெருமையை அறியகில்லார்!
உன்னிடவும் மனது மில்லார்! ஆயினுமவர்
உரைப்பது நாட்டன்பு உரிமை என்றே
சொன்னல முரிமை யுணர்வை-ஒரு குலத்துச்
சொத்தாக்கி உரிமையிங் கிழைப்ப தென்னே! (இன்ன)

(39) நன்றியில்லார் உய்தலுமில்லார்-எனவரிய
நன்மொழி புகன்றதமி ழறிஞர் சொற்போல்
நன்றி கெட்ட தமிழர் சிலர்!— தமிழ் மக்களின்
நலம்பறி போவதையும் உன்னிடாமலே
நன்றி கெட்ட ஆரியர்கட்கு!—அடிமைகளாய்
'நாட்டுப் பற்'றென்றே தொண்டு புரிந்தலைந்து
குன்றிச் சிறைகளிற் கிடந்து—பிழைப்பிழந்துக்
கொண்டதல்லாதுரிமை கண்டதுண்டோ? (இன்ன)

(40) குன்றனைய தோளையுடையீர்!-காங்கிரசுடைக்
குற்றவாளிப் பார்ப்பனனைக் கொல்லை வழியில்
நன்றிவர்! 'தியாகி' யெனவே!-அழைத்து வந்து
நாடாளும் உரிமையை நாட்டிக் கொடுப்பார்!
என்றலறிக் கிளர்ச்சி செய்தென்?—உருப்படியாய்
ஏதொன்றும் செய்யவிய லாது வருந்தி
பொன்றி நிற்குந் தமிழர்களே!—நினைந்துருகும்
போதகரே பட்டம்விட்டோர் கதையும்கேளும் (இன்ன)

# 13

## பட்டம் விட்டோர் பரதவிப்பு

(தம்மவர்களையும் தமிழர் கட்சியையும் இகழ்ந்துரைத்து விட்டு விலகிப் பார்ப்பனர்களை அடைக்கலம் புகுந்தால் பவிசுந் தவிசும் பெறுவோமென பட்டம் விட்டுக் காங்கிரசில் ஒட்டிக் கொண்ட தன்மானம் குலமானம் கெட்ட சில 'தமிழர்'களது முறையீடு)

### கிளிக்கண்ணி



1 தேசாபிமானி என்றும்
தியாகஞ் செய்தோர்களென்றும்
வேசமும் போட்டோமடி! கிளியே!
விளம்பரம் பெற்றோமடி!!

2 தாசத்வம் பூண்டு நின்று
தமிழ் மக்களை இகழ்ந்து
மோசம் புரிந்தோமடி! கிளியே!
மூர்த்திக்கும் வால்பிடித்தோம்!

3 பார்ப்பனர் சூழ்ச்சி கண்டும்
பண்ணுங் கொடுமை கண்டும்
பார்ப்பனர் மெச்சிடவே!-கிளியே!
பணிபல செய்தோமடி!

4 ஊருக்குழைத்துழைத்து
ஓட்டாண்டி யானநீதிப்
பேர் பெற்ற தமிழர்களை!-கிளியே!
பேசாத தெல்லாம் பேசினோம்!

5 வருவாயில்லாத மூர்த்தி!
மகராசனாகிக் காரில்
திரிவதைக் கண்ட பின்பும்!—கிளியே!
த்யாகி அவரே என்றோம்

6 கருப்புக் கண்ணுடி மாட்டி
காந்திப் பெயரைச் சாற்றி
திருப்பி யடிப்பவரை!-கிளியே!
'சீலப் பெரியா' ரென்ருேம்!

7 செந்தமிழ் நன் மொழியை!
தித்திக்குந் தேன் மொழியை!
வந்தே மாதரம் சொல்லி!-கிளியே!
மாய்த்திட எண்ணி நின்ருேம்!

8 'இந்தி' "மகாத்மா" வென்று
ஏமாற்றும் பார்ப்பனர்கள்
புந்தி குளிர்ந்திடவே-கிளியே!
போட்டோம் ஜய கோஷந்தான்!

9 "மஞ்சள் பெட்டி" நிறைய
மல்லாடி ஓட்டுப் பெற்ருேம்
"மஞ்சள் பெட்டி செலிக்க-பணத்தை
வாரிக் கொடுத்தோமடி!

10 கொஞ்சம் பொறுக்காமல்
கோவித்து ஓடிவந்தோம்!
பஞ்சைக ளாஞேமடி-கிளியே!
பார்ப்பனர் காலடியில்!

11 பட்டத்தை விட்டிடுங்கள்
பதவி தருவோ மென்ருர்
பட்டத்தை விட்டதன்றி!-கிளியே!
பவிசென்ன கண்டோமடி?

12 முட்டாள் தனம் புரிந்தோம்
மோசம் போஞேமையையோ!
பட்டந் துறந்ததல்லால்!-கிளியே!
பயனென்ன கண்டோமடி?

13 சிறைகளில் கல்லுடைத்து
செக்கிழுத்தே உழைத்து
அறைதடி யடியும் பட்டார்! தமிழர்
ஆரியர் சூழ்ச்சியினுல்!

14 தேசத்துரோகஞ் செய்து
தேவரைத் தோற்கடித்த
மோசக்காரப் பார்ப்பனன்-கிளியே!
முக்கிய மந்திரியாம்!

இங்ஙனம், தமிழர் நலத்தையும் தமிழர் கட்சியையும் பார்ப்பனர்க்குக் காட்டிக் கொடுத்த தமிழர்கள் தாம் பட்ட பாட்டையும் கெட்ட கேட்டையும், கருவாட்டுக்கண்டத்தைத் தின்ற பார்ப்பனப்பெண், அது தொண்டையில் மாட்டிக்கொள்ள, அதை மெல்லவும் முடியாமல் வெளியாரிடம் சொல்லவும் முடியாமல் திருடனைத் தேள் கொட்டியபடி தவிப்பது போல், காங்கிரஸில் பார்ப்பனரால் இகழ்ச்சி செய்யப்பட்டு நிலைகெட்டு நின்று தங்களுக்குள்ளாக உள்ளம் வருந்திய காங்கிரஸ் தமிழர் பாடும் பாட்டைச்

## நொண்டிச்சிந்து தொடர்ச்சி

42 செவி கொடுத்தீரோ? அன்பரே! தமிழர்களாம்
தேசபக்தர் காங்கிரசில் கண்ட‡ துய்ப்பினை!
புவி பொறுக்காத செயல்கள்!-செய்தாலுமையர்
பூசுரர் பூதேவர் மிகப் பொருப்புடையோர்
நவையையும் நல்ல தாய்க் கொள்வார்-நல்லோர்களென
நவின்றுப் பார்ப்பனர் பிழை மறைத்து விடும்
கவித் தமிழர்கள் குருட்டுக் - கண்கள் தனிலே
கறையுற்ற இச்செயல்கள்காணப்படுமோ? (இன்னமும்)

‡ துய்ப்பு—பழக்கம், அனுபவம். (Experiance)

## சாதித் தொல்லை

மற்றும் நம் நாட்டில் தமிழரிடை ஆரியரால் ஏற்பட்டு ஒற்றுமை செடுத்துத் தொல்லை விளைத்து வருத்திவரும் வேற்றுமை நஞ்சாகும் சாதிப் பிரிவினைகளையும் குறித்து உன்னும் போழ்து எனது உள்ளம் குழப்பமும் ஊறும் பெற்று வருந்தி வருந்தி வாடும் நிலையைக்குறித்து எனது

43 காதலரே! காதலரே! கழறிடுவேன் கேளும்
காதலி நான் சொல்லுங்குறை நீக்கி யெனையாளும்
'சாதி' செய்யுங்கொடுமைதனைச்சாற்றிடவும் போமோ?
சாதுக்களுங் கூட இங்கு சாதிப்பகை கொண்டார்!
ஏதம் சொல்லிச் சொல்லி இங்கே எத்தனையோ சாதி!
ஏற்படுத்தி விட்டதொடு ஏட்டையுங் கெடுத்தார்
வீதிக்கொரு சாதி! திண்ணை மேடைக் கொரு சாதி!
வீம்புக்கொரு சாதி! தழை தாம்புக்கொரு சாதி! (காத

44 ஆதாரவா யணைய வந்த ஆசைத்தமி ழரசே!
ஆயிரம் தான் சாதி என்றால் அதிகப் படியாமோ?
பேதைப் பெண்ணடிமை சாதிப் பிரிவினைகள் செய்தே
பிழைக்கின்ற கூட்டம் செய்யும் பிழையை யறியீரோ?
காதல் மணம் களவியலுங் காண உணர்வில்லார்
கைம்பெண்களை மதிமயக்கிக் களவியல்ஏன் கொண்டார்?
ஓதுவது நீதிமுறை உறிஞ்சுவது கள்ளோ?
உலுத்தர்களால் தேயமது உருப்படாமல் போச்சே!

45 பெண்ணிடத்துக்காணுகின்ற பிழைகளுக்கு எல்லாம்
பேசுகின்ற ஆண்மகன்தான் பெரிதும் ஏது காண்பீர்!
கண்ணனைய மனைவி என்றோர் கட்டழகி இருக்க
காளையரே வேறு பெண்ணைக் காமுறுதல் முறையோ?
புண்ணுடையோ னொனும் புருடன் தெய்வமென்பீர்!
புதிய இளம் பெண்ணெனினும் மறு பெண்ணைப்பார்ப்
எண்ணிடவும்போமோ இவ்வாண்மக்கள்செயல்கள்[பீர்
எல்லோர்க்கும் ஓர் நீதி இறை நீதி யன்றோ?

46 எண்ணுக் கடங்காத ! பெண்களை ஆண்மணக்க !
இல்லத்தாள் மாண்டாற் பின் மற்றொருபெண் கொள்ளப்
பண்ணுகின்ற செய்கையெல்லாம் ஞாயமோ ? சொல்
[வீரே ?
பாரதத்தை நேர்மைசெய்யப் பாரினில் வந்தோரே !
வண்ண எழில் ! வீசும் வடிவழகா ! என்துரையே !
வஞ்சநெஞ்ச ! ஆரியரும் ! கோடரிக்காம்புகளும் !
கண்ணகன்ற நம் நாட்டு மக்களைக் கெடுத்துக்
*கைக்கூலி வாங்கிப் பல கலகஞ் செய்கின்றீரே !

47 "அஞ்சுவது பேதைமையாம் !" என்பதை மறந்தோம் !
அஞ்சியஞ்சி ! ஆரியர்க்கே அடிபணிந்து ! வந்தோம் !
"கெஞ்சுவதும் ! "பாதநூளி !" "அடிமை !" "தாசன் !"
[என்றே
கேள்வியில்லாப் பயல்களின்முன் ! பெண்களுடன்
[நின்றே !
துஞ்சும்வரை பல்லிளித்துத் தோத்திரம் செய்வதும்,
சுயநலத்தால், அன்னியர்கள் சூழ்ச்சிகளை ! நம்பித்,
"தஞ்சம் !" என அவர்களையே ! சரண்புகுவதுந்தான் !
"தர்ம"மெனக் கொண்டிங்குச் † "சா"வன்னுவானேம் !

48 "பஞ்சமோ ! பஞ்ச"மென்று பரிதவிப்பதல்லால்,
பஞ்சமிங்கு வந்தவகை பார்க்க மனந் துணியோம் !
அஞ்சாமல் ஆரியர்கள் கொள்ளையிடப் பார்த்தும் !
"ஆண்மக்கள் !" என்று டலம் தாங்கித் திரிகின்றீர் !

---

* கைக்கூலி ஒரு திங்களுக்கு ரூ. 75-யும் நாள் ஒன்றுக்கு படி ரூ. 2-8-0-யும் ஊரிலிருந்து சட்டசபை சென்று வர இரட்டிப்புக் கட்டணமும் திங்களுக்கு ரூ. 500-ம் படியும் ரூ. 250-ம் படியும் முனிசிபல் சேர்மன் ஜி- போர்டு தலைவர் பேறும் மற்றும் பல வழியில் பயனும் பெற்றுக்கொண்டு தமிழ்மொழி தமிழ் மக்கள் நலத்தை விட்டுக் கொடுத்து வரல்!

† சா: சாப்பாட்டு ராமன்களாக.

"கஞ்சாகள்ளுங்கருப்பும்குடித்துக் குடித்தாடல்!
கண்டவிடம்! தெருவெல்லாம்! கோயில்பஜனை கூடல்!
நஞ்சாகும் பார்ப்பனர்க்கு! நாளும் பூரி நல்கல்!
நவிலு மிவை தாம் நமது "குலத்துப்பணி!" என்றே

49 நினைத்துழைத்துக் கொடுத்தலையும் நிலையநியாமக்கள்!
நிலையறிந் திரங்கியவர் நேர்மை நலந்துய்க்க!
வினைபுரியும் அறிஞர்களும் இளைஞர்களும் உண்டோ?
"வேதாந்தம்!" "சித்தாந்தம்!" பேசுவதல்லாமல்?
தினைப்புனத்தும்! கானகத்தும்! திரிகின்ற வேடர்!
செய்கையிலும் ஞாயமுண்டு! செப்புகின்ற தூய
மனைகளிலும்! உயர்வான மாளிகைகள்! தனிலும்!
வாழுகின்ற உங்கள் கதை! வழுத்திடவும் தகுமோ?

50 தனக்குத்தான் மண்போடுந் தந்திசெயல் போலே
தமக்குள்ளே சண்டையிட்டுச் சாகின்றீரையோ!
மனத்தூய்மை இல்லை! நன் மதியுணர்வு மில்லை!
மன்பதைக்குத் தொண்டு செய்யும் மாண்பளியு மில்லை!
தினமும் நந்தமிழர்படும் சீரழிவைக் கண்டே
சிந்துகின்றேன் கண்ணீரென் சிந்தை யறிவீரோ?
இனவன்பு, மொழியன்பு, நாட்டன்பு வேண்டும்!
எதற்கும் முதன்முதலில் பகுத்தறிவே வேண்டும்!

## தமிழர்கள் செய்ய வேண்டியவை

"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்" என்னும் பாரதி வண்ணத்தில் பாடுக.

51 ஆசை நாயகரே! புகல்வேனே
அரிய நந்தமிழ் நாடு செழிக்க
மாசிலாத மனத்துடனின்று
மக்கள் வாழ வகைதனைக் கேளீர்!
ஈசல் போல் மக்கள் மாய்ந்திடல் கண்டு
இரங்கும் நெஞ்சம் முதல் முதல் வேண்டும்!
நேச மாகவே ஆணொடு பெண்ணும்
நிமிர்ந்து வாழ வழிசெய்யல் வேண்டும்! (ஆ)

52 நீசர் தம்மைத் திருத்திடல் வேண்டும் !
நேர்மையற்ற கொடுஞ் செயல் மாக்கள் !
பேசுந் "தீண்டாமை" போக்கிடல் வேண்டும் !
பேதைமைச் சாதிப் பித்தறல் வேண்டும் !
மாசு நெஞ்சர் "மறை ! மதம்" வேண்டாம் !
வாய்மை காத்து வளர்த்தலே சாலும் !
நேசரோடு நெருங்கி இருந்து
நினைத்த செம்பணி செய்திடல் வேண்டும் ! (ஆ)

53 நாட்டுக் கல்வி வளர்த்திடல் வேண்டும்
நாளுந் தமிழ் விழாச் செய்திடல் வேண்டும் !
பாட்டுக் கற்று மகிழ்ந்திடல் வேண்டும் !
பயிலும் நூல்மனை ஊர் தொறும் வேண்டும் !
வீட்டுக் கேற்ற செலவுதான் வேண்டும் !
வீதி தோறும் பயில் பள்ளி வேண்டும் !
கூட்டுக் கைத்தொழில் வணிக மனைகள் !
கோதி லாதமைத் தாண்டிடல் வேண்டும். (ஆ)

54 கோட்டை கொத்தள மேடைகள் வேண்டாம் !
குற்றமற்ற நல் வீடு கள்பார்க்கும் !
நாட்டிடையமைத் தொன்றி-இனிதாய் !
நலஞ்செய் கூட்டுறவே என்றும் வேண்டும் !
சேட்டை மிஞ்சிய மானிடர் தம்மைச்
செம்மை செய்யற மன்றங்கள் வேண்டும்
வாட்ட முற்று வருந்திடும் ஏழை
மக்கள் தம் நிலை மாற்றிடல் வேண்டும் (ஆ)

55 கணிதம் ஓவியம் கட்டுரை பயிலல்
காவியம் புதிதாக அமைத்தல் !
அணி வகுத்துப் படையை நடத்தல்
அன் பறிவால் உலகினை வெல்லல்
பணிவோ டின்னுரை யாடப் பழகல்
பணியே புரிந்து கவலை விலக்கல்
துணிவோ டெண்ணிய செயல்களைச் செய்தல்
சோம்பல் போக்கிச் சுறு சுறுப்பாதல் !

56 பிணிகள் நீக்க மருத்துவந் தேர்தல் !
பிழையைக் கண்டே அறப்பழி கூறல்
துணிகள் நெய்யத் தெரிதல் பெருகும்
துன்பந் தீர்க்குந் திடமொழி சொல்லல்
பணிகள் தூயன வாக வியற்றல்
பைந்தமிழ்க் கவி வாணரைப் போற்றல்
மணி கொழிக்குங் கடல் வழி சென்று
மாடு கொண்டு நம் நாடு திருத்தல் !

57 உடற் பயிற்சிகள் நாள் தோறும் செய்தல் !
உடம்பைப் பேணி உயிரை வளர்த்தல் !
தடவரைகளில் ஏறி இறங்கல்
தயவை எவ்வுயிர் மீதுஞ் செலுத்தல்
இடமில்லாத் தமிழர் இடங் கொள்ளச்
செந்தமிழ்க் கவி சொல்லி உணர்த்தல்
கடன் கழித்தல் கடமை முடித்தல்
கருதித் தக்க வழியில் நடத்தல்

58 மடயர் புத்தி தெளிந்தே அரிய
மன்பதைக்குத் துணை செய்யுமாறு
கடமை காட்டிநற் கல்வி கொடுத்துக்
கயமை நீக்கி அறிவைப் பெருக்கல்
தடபுடல் மூடத் தன்மை விலக்கல்
தஞ்சம் சார்ந்தவர் தம்மைப் புரத்தல்
இடம்பிடித்திடச் சுற்றித் திரியும்
எதிரிகட் கிலக்காகா திருத்தல்

59 இந்தியர்க்குத் தலைஎன்று கொள்ள
எனது காதற் றமிழரசே ! போர்
தந்திரங்களைக் கற்று நடத்தல்
தமிழின் ஆணையை எங்குஞ் செலுத்தல்
விந்தியத்தொ டிமமலை தன்னில்
மீண்டும் செந்தமிழ்க் கொடிதனை நாட்டல்
செந்துவர் மொழிப் பெண்கள் தமக்குச்
சிறப்ப ளித்தவர் உரிமையைப் பேணல்

60 முந்தி நின்று குறித்த காலத்தில்
முடித்தல் வேண்டும் எடுத்த பணியை
எந்த நாளும் அறிவைப் பெருக்க
ஏற்ற கல்வி நிலைத்திடச் செய்தல்
" வந்தே மாதர " மென்று முழக்கி
வாய் வேதாந்தம் பேசித் திரியும்
தந்திர நரிகள் செய்கை மாய
தரணி மீதுண்மைத் தொண்டினை நாட்டல்

61 " மதப் " பெயர் கொண்டு சண்டை புரிந்து
மாயுமக்களை மீட்டிடல் வேண்டும் !
புதுமையான தொழில் முறை கண்டு
பொது உடைமை நலந்துய்க்கு மாறு
இதமொழி கொண் டினியவை சொல்லியே
இந்தியர்களை ஒன்று படுத்தி
விதமறிந்தே உரிமையை நாட்டி
வீறு கொண்டதைக் காத்திடல் வேண்டும் !

62 " சதமில்லை, உலகம் மித்தை !" யென்று
சாற்றிப் பஞ்சணை மீதில் உறங்கும்
பதர்களாம் ! சிற்சில " சந்நியாசிகள் "
பகர் மடாதிபதிகள் ஒழுங்கிலாக்
கதைகள் சொல்லி எழுதிப் பிழைத்திடும்
கயவர் தம்மைத் திருத்துதல், நல்லவை
நிதம் நிதம் செய்ய எண்ணுதல் ஞாலத்தில்
நீண்ட நாள் உயிர் வாழ உடல் பெறல் !

63 மாசிலாத் தமிழ்நாட்டு வீரர்க்கும் !
மாண்பு சேருந் தமிழ்ப் பெண்களுக்கும் !
காசு' தந்தவர் கவலை யகற்றிக்
காட்டும் நல்வழி சென்றிடல் மெத்தப்
பேசுவார் பலர் செய்கைக் குதவார் !
பிழை தரும் இவர் நேசம் விலக்கல் !
தூசு கண்ட பொழுதே துடைத்தல் !
தூய நெஞ்சின ரோடுற வாடல் !

64 தேசந் தோறுந் திரிந்து பயின்று
செல்வம் பல்லியல் கொண்டு திரும்பி
ஆசை நாயகரே! நமைப் பெற்ற
அன்னை தமிழ் மகள்! வாழ அமைத்தல்!
பேசுஞ் செந்தமிழ்! மொழிநடை யாலே
பிழைப்பதற்கு வழிசொலும் நூற்கள்
மோசமின்றி இயற்றிடல் மக்கள்
முன்னேறும் வழிகண்டு நடத்தல்

65 இன்னமும் பல நன்மைகள் வேண்டும்!
எனது காதலரே! இதைக் கேளும்!
சின்ன சின்ன நலங்களை விட்டுச்
சிறந்த நாட்டுத்தொண் டாற்றிடல் வேண்டும்
பன்னும் இளமை மணத்தை விலக்கிப்
பருவகால மணஞ்செயல் வேண்டும்
கன்னியர் மணத் தாலோ எவ்வாறோ
"கைம் பெண்" ணனவர் உள்ளம் விழைந்தால்

66 பின்னரும் மணஞ் செய்திடல் வேண்டும்!
பெண்மை இன்பம்! உரிமை! மற்றிங்குப்
பன்னரும் நலம் துய்த்திட வேண்டில்
பகர் கலப்பு மணஞ் செய்தல் வேண்டும்
இன்னணம் இங்குச் செய்திடும் போழ்தில்
எதிரிகளெனச் சூழ்ச்சிகள் செய்வார்!
மன்னவா! என்ற னுசைத் தமிழா!
மட்டந்தட்ட அறிவை வளர்ப்பாய்!

67 காதல்! காதல்!! காதல்!!! காதல்!!!!
காதல்! இல்லையேல்!! சாதலும் மேலே !!!
காதல் பொங்கிய நன்மணம் செய்தல்!
கயமை மூப்பர் மணந்தனை நீக்கல்
ஈதல் நல்லற மென்பதறிந்தே
ஏழை மக்கள்! முன்னேறிடுமா
றாதியங்கள் கொடுத்துத் தொழிலை
ஊர்கள் தோறும் பெருக்கிடச் செய்தல்!

68 மாதவ்வை ! இளங்கோ ! வள்ளுவர் ! பேர்
வைத்துப் பல்லியல் பள்ளி யுண்டாக்கல் !
கோதிலாத் தமிழ்க் காதல் நிறைந்த
"கோயி"லாகவே ஒவ்வொரு வீடும்
நீதிதங்கும் பொது அற வாழ்க்கை
நிலவுமாறு பயிற்சி யளித்தல்
ஈதே எனது விருப்பமென் நண்பா !
இனிய பெண்மை குறித்தொன்று கேளாய்.

## இனிய பெண்மைப் பாட்டு

"தன்னதனத் தானத்தன் தனதானு" எனும் பண்ணிற் பாடுக.

| | | |
|---|---|---|
| 69 இன்ப நிலை | சேரும் பெண் | மகளாலே ! |
| இன்னல்பிணி | போகும் பெண் | மகளாலே ! |
| துன்பமிலை | தூய்மைப்பெண் | மகளாலே ! |
| துய்ப்பறிவு | கூடும் பெண் | மகளாலே ! |
| அன்பு நிறை | வாகும் பெண் | மொழியாலே ! |
| ஐந்து நலம் | காணும் பெண் | பணியாலே ! |
| மன்பதையின் | வாழ்வே பெண் | மகளாலே ! |
| மக்களினி | மாதர் நலம் | புரிவோமே ! |

(மேற்கண்ட பாட்டின் முன்பாட்டின் இசையிற் பாடுக.)

70 ஆதலாலிந்தப் பெண்மை! தனக்கே-
ஆருயிருடல் ! நல்குமன்னைக்கே!
யாதொரு தொல்லை துன்பமில்லாது !
யாதும் உரியதாய் ஒத்ததாய்ச் செய்வீர் !
கோதையர் மகி ழுரிமை! திகழக்
குறைவற மக்கள் நலம் பெற்று வாழச்
சூதிலாத ! அரசு முறைதான் ! !
சொல்லுவேனதைக் கொள்ளுவிரோ ? நீர் !

## 71 ரசியப்-புது அரசு முறைப் பாட்டு

"என்ன கொடுமை !" எ. இ. பா.

1 என்ன புதுமை !!
இன்ப ரசி யாவின் கதை !!! (என்ன)

பல்லவித் தொடர்

2 எக்கதை ! எப்புராணத்தும் !
இக்கதை ! நாம் கேட்டதில்லை ! (என்ன)

3 "ஏழை, பணக் காரரில்லை !
வாழ ஒரு தொல்லையில்லை ! (என்ன)

துணைப்பல்லவி

4 தன்னுணர்வங்குத் தவழ்வதைப் பாரீர் !
தந்திரம் "மந்திரம்" மாய்ந்ததைப் பாரீர் !
தாழ்ச்சியில்லை !—சூழ்ச்சியில்லை !
மீட்சியுண்டு !—மக்களுக்கு ! (என்ன)

அடிகள்

5 மன்னவரில்லை ! மணிமுடியில்லை !
மக்களை ஏய்த்து வாழ்பவரில்லை !
மக்களெல்—லோருமே !
ஒக்க வாழ்ந்—திடலாம் !
"மாதவம்" வேண்டுவ தில்லை!
வாதனை யா தொன்று மில்லை ! (என்ன)

6 "கோயி"லு மில்லை ! "குருக்"களு மில்லை !
"கோயில்" "கடவுள்"போரால் ஆள்பவரில்லை !
கொள்ளை கொள்—ளும் புரோ
கிதக் கூட்—டமில்லை ;
"குற்ற"மொன்றுங் காணவில்லை !
சற்றும் யாரும் "வாட"வில்லை ! (என்ன

அடிகள் நீட்டம்

7 "மோட்சம்" "மதத்"தின் போரால் மோசமங்கில்லை !
மூட்டை "சுவர்க்கலோக"ப் பேச்சுமங்கில்லை !

மூட வ—ழக்க ஒ
ழுக்கமும்—இல்லையாம் !

முற்று மறி வுடையோராம் !
கற்றறிந்த மேதையராம் ! (என்ன)

8 கல்வியிற் றேறுவோர் நூற்றுக்கு நூறும் !
கைத்தொழி லாராய்ச்சியில் ரசியாவே மேலாம் !

கல்வியில்—லாதோரைக்
காணுதல்—இல்லையாம் !

காடெலாந் திருத்திப் பயிர்-
நாடெலாஞ் செய்கின்றனராம் ! (என்ன)

9 "பெண்ணு ணடிமை" என்ற பேதைமை இல்லை !
பேறுண வுடைக்குக் கவலையே இல்லை !

பேசிடுங்—குறைவிலாத்
தேசமாம் !—ரசியா !

"பே ராசர்" நாட்டிலுமிச்
சீர் சிறப்புக் கேட்டதில்லை ! (என்ன)

10 எல்லோரும் ஒரு குலம் ! எல்லோரும் ஒரு நிறை !
எல்லோரும் உரியராம் ! எழில் ரசியாவிற்கே !

இந்த நல்—வாழ்க்கை நம்
மிந்திய—நாட்டினில்

எந்த நாள் வந்து வாய்க்குமோ !
அந்த நாளே நல்ல நாளாம் ! ! ! (என்ன ! புதுமை)

72 வே. தா. பூ. எ. இ. பா.

கேட்டீரோ! ரசியத்தின் சிறப்பை!
கேண்மை மிஞ்சிய காதற் கரும்பே!
"நாட்டை மீட்டிடுவோ"மென்று கூறி,
நஞ்சுரைக்கு நறவுதேன் பூசி,
வேட்டையாடுக் "தியாகிகள்" பேசும்
வெற்றுரை "ராம ராச்சிய"ந் தன்னில்
காட்டக்கூடுமோ? இத்தகைப் புதுமை!
கவலையற்றுயர் மக்கள் நல்வாழ்க்கை!

73 "தன்னுணர்ச்சியை விடோம்" எ. இ. பா.

1 "அன்னிய வெள்ளையர்கள்-கொள்ளையிட்டே
ஆளு கின்று" ரெனவே,
பன்னிப் படை சேர்த்து-வலைகளில்
பட்டழி மானினம் போல்!

2 சின்னஞ் சிறுவர்களைச்-சிக்கவைத்துச்
செப்பிடு வித்தை செய்தே!
"இன்னல் களைந்திடுவோம்!-இந்தியாவை
இன்புறச் செய்வோ"மெனச்

3 சொன்ன ஆரியர் வழி-மாக்கள் செயும்!
சூழ்ச்சியைக் கேள் தமிழா!
இன்னும் பல பேரும்-பணிகளை
இந்திய நாட்டினுக்கு,

4 முன்னமியற்றுவது—தொண்டர்கள் தம்
முறைமை யா யிருக்க,
கன்னல் மொழித் தமிழைக்-கெடுத்திடக்
கங்கணங் கட்டி நின்று!
புன்மை இந்திப் பாடையை-இந்நாட்டிடைப்
புகுத்துவோர் கருத்தை,
உன்னித் தெளி தமிழா!—தக்க விடை
உரை செய்வாய் தமிழா?

## இந்தி எதிர்ப்புப் பாட்டு

தாய் மொழி அறிவும் தொடக்கக் கல்வியும் இல்லாத் நமக்கு - நமது கோடிக் கணக்கான மக்களுக்கு இதுகாலே -
(" ஜெய பேரிகை கோட்டடா ! " எ. இ. பா.)

பல்லவி

74 இந்தி ஏனையா ? எமக்கு ? எமக்கு ? (இந்தி)

பல்லவி மகுடம்

2 தாய்த்தமிழ் -
எழுத்தறிவே !! பெற்றிலாதவர்களுக்-கிந்தி !!! ஏனையா?

அடிகள்

3 மந்திரா லோசனை புரிந்தீர் ! — வஞ்ச
மனு தர்மக் குழு வொடு கலந்தீர் !
தந்திரமாய்ப் பொது மொழி வழி கூறித்
தமிழைத் தொலைக்க முனைந்தீர் ! முனைந்தீர் ! (இந்தி)

4 இந்திக்கோர் இலக்கியம் உண்டா ? — அது
எழுந்தது நேற்று ? பண்டா ?
இந்தியா முழுவதும் பேசுதல் உருதன்றி,
இடருள்ள இந்தி மொழி யல்லவே ! சொல்லும் ? (இந்தி)

5 " காங்கிர " சென்னும் பேர் இங்கிலீஷ் ! — அதைக்
காத்து வளர்த்ததெல்லாம் இங்கிலீஷ் !
ஆங்கிலத் துணைகொண்டு அறிந்தோம் பல வியல்கள் !
ஆரிய நன்றியில்லாக் காரியம் செய்தீர் ! (இந்தி)

6 பொது மொழி வாதம் பேசும் புலவீர் !—துளசி
புனைகதையை ஏனிதில் நுழைப்பீர் ?
மதியாருமது முன்னோர் வளர்த்து முயிரிழந்த
வடமொழி கற்க வாத மிடுத லெதற்கு ? (இந்தி)

7 தொடக்கக் கல்வியே இங்கில்லாது ! -- மக்கள் !
தொழும்பாய்க் கிடக்கின்ற போது !!!
துடுக்குத் தனமாய் " இந்தி துரைத்தன மொழி !" என்று
தொல்லை விளைப்பதெல்லாம் ! நல்லதல்ல !!! (இந்தி)

8 வளமற்ற இந்தி மொழி ! பயின்று — சற்று
வருந்தமி ழாங்கிலங் கெட் டுழன்று
அளப்பருங் காலம் வரை யறிவின்றிக் கொடிபிடித்
தடிமையாய்த் தமிழர்கள் கிடக்கச் செய்தீர் ! (இந்தி)

9 வடக்கே கட்டாய பாட மேது ? — அதை
வங்காளிகள் எதிர்க்கும்போது !
" மடத் தமிழர்க " ளென்று ! மதித்துக் கட்டாயபாட
மாக்க முயற்சிப்பது ! யோக்யதை யல்ல !! (இந்தி)

10 " தேர்தல் காலத்தில் வந்த பணிவும் !—சில
தின அதிகாரம் செய்யும் துணிவும் !
யாருங் கருதா" ரென்றே இறுமாப்புடனே நின்றே
இந்தி வைப்பீரானல் ! காங்க்ரஸ் மந்திரிக் குழாந் தொலை
[யும் !!! (இந்தி)

"தன்னுணர்ச்சியை விடோம்" எ. இ. பா.

75 இவைகட்கு -
1 விடை பகரு வீரோ ? — உள்ளம் வெம்பி
வெறுத்துரைப்பீரோ ?
நடையழ குடையீர் ! செந்தமிழின் !
நலம் பல உடையீர் !

2 படைக்குத் தமிழர்கள் ! அங்கே யிடும்
பலிக்குத் தமிழர்கள் !
முடைக்குத் தமிழர்கள் ! — சிறைத்தடி
முனைக்குத் தமிழர்கள் !

3 கொடைக்குத் தமிழர்கள் ! — பணங்கொட்டிக்
கொடுக்கத் தமிழர்கள் !
உடைக்குத் தமிழர்கள் ! சிறையிற் கல்
உடைக்கத் தமிழர்கள் !

4 கடைக்குப் பார்ப்பனர்கள் ! — கதர்க்கண்
காட்சிக்குப் பார்ப்பனர்கள் !
அடைக்குப் பார்ப்பனர்கள் ! தலைப்பொறுப்
ளாட்சிக்குப் பார்ப்பனர்கள் !

5 உழைக்கத் தமிழர்கள் !— வெற்றியொலி
ஒலிக்கத் தமிழர்கள் !
பிழைக்கப் பார்ப்பனர்கள் ! — கொடிபரி
பிடிக்கத் தமிழர்கள் !

6 " கழைக் கூத்தாடி டினும்—ஆரியர்கள் !
காரியக் கண்ண ரென்பார் !
பிழை இதை யறிவீர் ! — ஆரியத்தின்
பித்த மகன்றிடு வீர் !

## தமிழன் பாட்டு

76 ( கண்ணிகள்-பொருந்தும் இசையிற் பாடுக)

1 ஆசைத் தமிழா ! - நல்ல !
அன்புத் தமிழா !
தேச நிலையைத்
தெரிவாய் ! தமிழா ! (ஆசை)

2 நேசத் தமிழா ! வெள்ளை
நெஞ்சத் தமிழா !
தாச நிலையைத்
தகர்ப்பாய் தமிழா ! (ஆசை)

3 மாசு மனத்தார்-சூழ்ச்சி
மனுவின் குலத்தார்!
தேசப் பேர்சொல்லிச்-செய்யும்
மோசங்களைப் பார்! (ஆசை)

4 "தேசபக்தர்க"-ளென்று
வேடம் புனைந்து
மோசக்குலத்தார்-செய்யும்
தேசத்ரோகம் பார்! (ஆசை)

5 திலகர் நிதி - செப்பும்
சி. ஆர். தாஸ் நிதி!
பல கதர் நிதி;-பகர்
அரிஜன நிதி! (ஆசை)

6 நலமறிந்திடாப் பெண்கள்
நகைகளின் நிதி!
பல பல நிதி!-ஹிட்லர்
படேலின் நிதி! (ஆசை)

7 கூச்சமில்லாமல்-உப்பு
கொண்டு வருவதாய்!
ஆச்சாரி கூட்டம்-சேர்த்த
அறுப தாயிரம்! (ஆசை)

8 பேச்சுத் தானுண்டா?-இவைக்குப்
பேரேடும் உண்டா?
போச்சுதே பணம்!-கொள்ளை!
போச்சுதே அன்பா! (ஆசை)

9 பருத்திநூல் தொண்டர்க் கெல்லாம்!
பாய்ந்துதே பணம்!
கருத்த தமிழன் -வயிறு
காய்ந்ததே அன்பா! (ஆசை)

10 * மருத்துவச் சிபார்-சுகள்
வாங்கிச் சிறையில் !
விருந்துண்டிருந்தோர் !!-வீரத்
த்யாகி களாமே!!! (ஆசை)

11 கொடியைப் பிடித்து ! வெற்றுக்
கூச்சல்கள் போட்டுத்
தடியடிபட்டுச் - சிறைத்
தண்ணீர் குடித்து !!! (ஆசை)

12 மடிந்து போகவோ ? தமிழா !
மண்மேல் பிறந்தாய் ?
இடிந்து சோராதே !-வீர !!
எண்ணங் கொண்டெழு !!! (ஆசை)

13 பன்னூற்றுண்டாகத்-தமிழைப்
பாழ் படுத்திய
அன்னிய ரிந்தி-கொண்டே
ஆளப் பார்க்கின்றூர் ! (ஆசை)

14 முன்"சுய ராஜ்யம்"-வேண்டு
மென்று மொழிந்தோர் !
புன்மை "ராம ராஜ்ய"த்தைப்
புகழ்ந்து பாடுறூர் ! (ஆசை)

15 தயையற்ற "ராம-ராஜ்ய"த்
தன்மை யறியோமோ ?
நயவாலி சம்புகனைக்-கேள் !
ராமன் நீதியை ! (ஆசை)

---

* எதிர்க்கட்சியாரிடத்தும் அரசாங்கத்திடத்தும் சிபார்சு பெற்று ஏ. வகுப்பு பி. வகுப்பு நலம்பெற்றுச் சிறையில் உல்லாசமா யிருந்தவர்கள். (பார்ப்பனர்கள்)

16 மயங்க வேண்டாம் !-சற்றும்
இயங்க வேண்டாம் !
மனுதர்மக் கொடுங்கோலரசு !
வேண்டவே வேண்டாம் ! ! ! (ஆசைத் தமிழா)

## என தாருயிரன்பரே !

("பள்ளிப் பிராயத்திலே" என்னும் பாரதி வண்ணத்தில் பாடுக)

77 இன்னும் புகன்றிடவோ ? தமிழ்
இளைஞ ரறிஞர் நடத்தை கிடத்தலை !
உன்னும் பொழுதெனது !-மல
ருள்ளம் சுருங்கி உணர்வு கலங்கி
கன்னித் துடிதுடித்தே !-"இனிக் !"
காசினிமேல் தமிழர் தமிழோங்கிட
நன்னிலை பெற்றுயா-ஒரு
நல்வழி ! ஏ"தென நாளும் நினைந்துரை
பன்னி வருந்தி யழும் வஞ்சப்
பார்ப்பனப் போக்கை யறிந்துண ராமலே
"அன்னவர் தங் கதைகள் இவைபுனை
அத்தனையும் மிக "உத்தம" மாமெனப்
புன்னெறி கொண்டழியும் !-தமிழ்ப்
"புலவர் அறிஞர்கள் ! ஞானியார்" தங்களுக்
குன்னுந் திறனில்லையோ ?-அன்றி
உண்மை நிலையை உணர்த்திடில் தன்னல
உண்மை வெளிப்படுமோ ?— (இன்னும்)

78 வெள்ளை உளத் தமிழர் !-"சாதி"
வேற்றுமை தீமை குறுகிய எண்ணமுங்
கொள்ள உளந்துணியார் !-ஒரு
குற்றமில்லாத குழந்தையைப் போலவே
கள்ள மொழியறியாத்-தமிழ்க்
காளை இளைஞரே ! ஆரியர் சூழ்ச்சியில்
மெள்ள விழுந்தவரே !-தமிழ்
மேன்மக்கள் ! போல "விரிந்த உள"முடை

"மள்ளர்கள்" "நல்லவர்கள்"-மதி
வாணர்கள" "மக்கள்" புவி யெங்கணுமில்லை!!
பிள்ளைச் செயல்களிலே - மிகப்
பெருமையும் வீரமும் பேசித் திரிந்திடும்
கிள்ளை மொழித் தமிழர்!-பிறர்
கீர்த்திக்குப்பாடி! உழைத்து ழைத்தேஎன்றும்
கொள்ளை கொடுப்பவர்கள்-மடக்
கொள்கை செயல்களைக் கொண்ட தமிழர்கள்!
கோநிலை எய்த லுண்டோ?

"பார்ப்பனர்க் கடிமையாயிருந்து தொண்டு செய்தால் தான் மற்ற மக்கள்-மனிதர்கள் அறிவாற்றல், பேறு பெற லாம்" என்றுன்னி-அறிவு குன்றி அடிமையாய்க் கிடக்கும் தமிழர்களின் அடிமை நிலைகண்டு இரங்கலும் வியத்தலும்.

## கும்மி

79 1 தாயின் கருப்பையில் தோன்றலுக்கும் - கவ்வித்
தரையில் தவழ்ந்து வளர்தலுக்கும்
"சே"யென நற்பெயர் பெறுதலுக்கும்'-கல்வி
செப்பு முன்னெழுத்தைச் செப்புதற்கும்

2 "காயந் தூய" தெனக் கழறலுக்கும்-"நல்ல
காட்சி" வருமென வாழ்த்த"லுக்கும்
ஆயும் இயல்பல கற்றலுக்கும் - தக்க
அழகியைத் துணைவியாய்க் கொள்ளலுக்கும்"

3 நல்ல மக்களைப் "பெறுத"லுக்கும் -மற்று
நவிலும் செல்வ நிலை "நாட்ட"லுக்கும்
ஒல்லும் "பலர் துணை யாத"லுக்கும் - இவ்
உலகில் நல்லார் புகழ் கூறலுக்கும்!

4 "தொல்லையின்றி இன்பந் துய்த்த"லுக்கும்"-"இறைத்
தொண்டர்கள் வாழும் சுவர்க்க"மெனும்
"எல்லையிலின்ப ஊர்" "காண்ப"தற்கும்-அங்கே
"எல்லோரும் நல்லவன்" என்பதற்கும்,

5 "தேவமொழி" யெனும் செத்த சமஸ்-க்ருதத்
தீயமொழிதனைப் பேணல் வேண்டும்!
ஈவிரக்கமற்ற கூட்டத்தின்-தாள்களில்!!
எல்லாங் கொடுத்துப் பணிதல் வேண்டும்!!!

6 மேவு முழைப்பும்! அன்பருளும்-மிஞ்சும்
மேன்மக்களாம் பழந் தமிழர்களே!
நாவில் வந்தபடி "ராட்சசன்" "சண்டாளன்"
"நாத்திகன்" "சூத்திரன்" "பஞ்சமன்"காண்!

7 "சூத்திரச்சி! பறைச்சி! பள்ளச்சி!"-என்று
சொல்லவுங் கூசாமல் சொல்பவரை
போற்றிப் புகழ்ந்து வணங்கிடுந்-தமிழர்
புத்தியின் கூர்மையை! என்னவென்பேன்!!!!

8 சாத்திரங்களென்று வேற்றுமை நூல்களை
"சாமிகள்" பேர் சொல்லி ஆண்டுவரும்
சூத்திர ஆரியர்! இந்திப்பற்றைக் கண்டும்!!!
'சொறணை' வல்லை தமிழருக்கே!

80 சேந்தமிழ் வாழ்த்துப் பாட்டு

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!" எ. இ. பா.

1 வாழ்க செந்தமிழ்! என்றொலி செய்யடா!
வாழ்க செந்தமிழ்! என்றுரை கூறடா!
வாழ்க செந்தமிழ்! என்றுசங் கூதடா!
வாழ்க செந்தமிழ்! வையக மெங்குமே! (வாழ்)

2 வாழ்க பாண்டியர்! பெற்ற தமிழ்மொழி!
வாழ்க சேரர் வளர்த்த தமிழ்மொழி!
வாழ்க சோழர்! புரந்த தமிழ்மொழி!
வாழ்க வாழ்க தமிழ்மொழி! வாழ்கவே! (வாழ்க)

3 இனிமை சேர்க்கும்! எழில்பெறச் செய்திடும்;
இன்ப வாழ்க்கையில் ஏற்ற மளித்திடும்;
"கனிகற்கண்டு தே"னென்னச் சுவைதரும்;
காலங்கண்ட தமிழ்மொழி வாழ்கவே! (வாழ்க)

4 மனிதவேற்றுமை சொல்லிடும் நூற்களை
மறுத்தொதுக்குந் திருக்குறள் வாழ்கவே!
மனிதர் வேற்றுமை யற்றுமற் றுயிரொடு
மாண்புறத்தமிழ் மண்ணிடை வாழ்கவே! (வாழ்க)

5 கண்ணகி மணிமேகலை கற்றது
"காவியங்க"ளெனப்பல பெற்றது!
நுண்மை கொண்ட அறிஞர் உழைப்பெலாம்!
நூல்களாய்க் கொண்டு ஞாலத் தொளிர்வது!! (வாழ்க)

6 அண்ணல் நக்கீர ராண்மையைக் காத்தது!
ஆரியர்! புத்தர்! சமணர், கிறித்தவர்,
வண்ண ஐரோப்பியர்! மகம்மதியர்கள்!
வாழ்த்திடச் சுவை நல்கிய தமிழ்மொழி! (வாழ்க)

7 அன்னை பாலொடும் ஊட்டிய தமிழ்மொழி!
அருமைப் பாட்டிகள் பாடிய தமிழ்மொழி!
மன்னுந் தந்தை மகிழ்ந்த தமிழ்மொழி!
மாசிலாப்பல புலவர் தமிழ்மொழி! (வாழ்க)

8 இளமை காத்தது எங்கள் தமிழ்மொழி!
இன்பக்காதலி பேசுந் தமிழ்மொழி!
வளமை சேரவ்வை மறைமலை தமிழ்மொழி!
மகிழுமாணிக்க நாய்க்கர்! தமிழ்மொழி! (வாழ்க)

9 சோர்வை நீக்கிடுந் தூயறிவீந்திடும்!-
சுறுசுறுப்போடு நன்மை பெருக்கிடும்!
பார்வைக்கே முத்துபோல அணிதரும்!
பழந்தமிழ்மொழி! வாழிய! எங்கணும்! (வாழ்க)

10 ஆர்வ மூட்டும் அழகிய செந்தமிழ்!
ஆணைசெய்யுமேல் ஆருயிர் நல்குவோம்!!
யார்வரினுமிவ் வுலகெதிர் நிற்பினும்!!
யாது மஞ்சிடோம்!!-சூதுக் கிணங்கிடோம்! (வாழ்க)

முன் பாட்டுத் தொடர் இசை

என்று,

81 இங்கொளிதுள்ள நின்று-தமிழ்மொழி
எழுச்சி நாடி வென்று,
துங்க முயர்ந்திடவே-தமிழர்கள்
தொழும்பை நீக்கிடுவீர்!
எங்கணும் செந்தமிழ் மா-மொழிதரும்
எழில் நலம் பரப்பி
மங்கல வாழ்வடைவீர்!-தமிழரை
மாண்புறச் செய்திடுவீர்!!

82 "எங்களின் கண்முன்னே-தமிழ் மகள்
எண்ணும் உரிமை கண்டு,
செங்கோலைத் தாங்கி நின்றே-நிலமெங்கும்
செப்புந் தமிழரசாய்!
பொங்கி நன் மன்பதைதான்!-செந்தமிழ்ப்
பொழில் மணம் நுகர!
சங்கையில்லா துழைப்போம்!-" எனவே
தமிழ் இளைஞரெலாம்!

83 ஆண்மையுடன் கிளம்பி!-ஊர்தொறும்
அணிகண்டு பயின்று,
வீண்பணி விட்டகன்று-தமிழ் மகள்!
வெற்றியைப் பாடி நின்று,

துணையும் பொருதிடும்-உரமுடைத்
தோளுடையாண் மக்களாயப்
பேணுதல் வேண்டுமன்பா!-தமிழ்நலம்
பேணுதல் வேண்டுமன்பா!

"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்" எ. இ. பா.

84 இங்ஙனம் தமிழ் மக்கள் தம் முன்னர்
இயற்ற வேண்டிய பணிபல உளதால்,
எங்ஙனம் இது காலை நாம் கூடி
இல்லறம் செய்ய அமைதி கைக்கூடும்?
வெங்கரி யரிமா நடை வீரா!
வீறிலாது செல் வாழ்வொரு வாழ்வோ?
துங்கமே உரு வாகிய தோழா!
சொல்லுமிவ்வுரை உள்ளத்துள் வைப்பீர்!

85 மீண்டும் நாமிரு பேருங் கலந்து
மேன்மை யான நல்லில்லற மாற்றி
நீண்ட நாளிங்குக் காதல் மணத்தால்
நேரும் இன்பத்தை நாளும் நுகர்ந்து
ஆண்டகையன் செங் குட்டுவன் போலே
ஆற்றல் மிஞ்சிய மக்களைப் பெற்று,
வேண்டும் பன்னலந் துய்த்திடல் வேண்டும்
மேலைத் தேயத்து மக்களைப் போலே!

86 யாண்டும் யாவரும் ஒன்றி மகிழ்ந்து!
யாழினிற்றமிழ் பாடிடக்கேட்டு
மாண்பு பெற்ற தமிழ்மக்கள் வெற்றி
மண்ணெலாந் தமிழ் வெற்றி கொண்டாளக்
காண்டலே என்றன் உள்ளக்கிடக்கை!
காதல் உள்ளத்தை அள்ளிய தோழா!
ஈண்டிச் செம்பணி வெற்றியினாலே
இருவரும் ஒன்றி இன்புற்று வாழ்வோம்!

"தன்னுணர்ச்சியை விடோம்! எ. இ. பா.

ஆகவே அன்பரே! என் உள்ளத்தில்,

87 தோன்றி நிற்கும் எண்ணத்தைத்-துணைவரே!
சொல்லி விட்டேன் தங்கள் பால்
ஊன்றி நினைப்பீரோ?-தமிழர்கள்
ஒன்றி உழைப்பீரோ?
தோன்றலும் நீரேவீர்-என்னுயிர்த்
தோழரும் நீரேவீர்!
மான்றலிதில் வேண்டாம்!-தங்களின்
வாழ்க்கைத் துணைவியாவேன்!"

"வெள்ளை மலரணை மீதினிலே" எ. இ. பா.

88 இவ்விதம் நந்தமிழ் மக்கள் நிலையை
இயம்பி மிக நெருங்கி-பல
இன்னுரையாடி மலர்க்கரத்தாலென்னை
இறுகக்கட்டி யணைந்தே-நறுஞ்
செவ்விதழ்! தந்திரு முத்தமு மீந்தொரு
சின்னஞ் சிறிய நகை-செய்து
செல்வத் தமிழ் மகள் நாடு குறித்தவள்
சென்றிட உன்னி நின்றாள்!-அந்தத்
திவ்விய நல்லாள் தியங்கிய காலை என்
சிந்தை கலந்ததையோ?— "இனி
செப்புவதென்ன?" வென் றேன் றறியாதவள்
சேலையைப்பற்றி நின்றேன் - மீண்டு
மவ் வொளிப் பெண்மணி! யாறுதலாய் ஓர் சொல்
லாடினள் நான் களிக்க! - "என்
னாசைத்துணைவரே! தாங்கள் செய்யும் பணிக்
காக்க மளித் திருப்பேன்!-

89 நம்முடை எண்ணங்கள் கை கூட வேண்டி
நாளும் பணிபுரிவேன்!-ஆசை
நாயகனுய அழகண்ணலே! வெற்றி
நாடித் துணையிருப்பேன் - நீங்கள்

நிம்மதியாக விருந்து தமிழை
நேசித்துக் கற்றறிந்து—சற்று
நினைக்க இனிக்குந் தமிழ்க் கவிபாடி
நெஞ்சக் குறை யகன்று — தமிழ்ச்
செம்மல் பழந்தமிழ் மக்களுடன் கூடி
செய்வீர் மறப்பணியே !-ஒரு
சிந்தனை வேண்டாம்! வெற்றி எக்காலும்
செல்வத் தமிழ் துரையே !-"என
தம்மை மீதாணை ! இரவும் பகலு மென்
ஞவி உமதிடத்தே ! — வைத்து
ஆக்க மளிக்கும் உரிமை நல் வாழ்வை !
யடைய நினைந்திருப்பேன்.

90 கந்த மலர்த்தொடை பூண்ட இளந்தமிழ்க்
காளை என் காதலரே ! - நல்ல
காதற் கனியுண்ண வேளை இது வல்ல !
காமர் துரைமகனே ! - முன்னர்
தந்த உரைகள் தவறிடேன் உண்மை !
தண்டமிழ் நாட்டினிலே !—புகல்
தறுகண் தமிழர் புரந்த தமிழ்ப்பதி !
சங்க மிருந்த பதி !—" புகழ்
செந்தமிழ்ச் செல்வி! திகழுநற் ருெல்பதி !
சீர் " திருக்கூடற் பதி !—எனும்
செய்ய பழம் மதுரைப்பதி சேர்ந்து நம்
சிந்தை மகிழ்ந்திருந்து — நாளும்
கந்துக மேறிக் களித்து நறுந்தமிழ் !
கற்றுக் கற்றுத் தெளிந்தே - இந்தக்
காசினி யாண்டிடலா !! " மெனச் சொல்லி ! என்
கண் மறை வாயினளே !!!

91 சுந்தா செந்தமிழ்ப் பெண்ணவள் ! தன் பேர்
சொல்லெனக் கேட்கு முன்னே !-அந்தத்
தோகை மயிலுடைத் தோற்றம் மறைந்தது !
துன்பமடைந்து நின்றேன் !—அவள் !

சொந்தப் பெயர் " தூய தமிழ் மகள் " என்றோர்
சுருளாலறிந்து கொண்டேன் - பேசுந்
துய்ப்பற்றே ஞனதால் கைப்பற்றி னேனில்லை !!
தோழியை ! என்றடை வேன் !!! - இனி
யந்தத் தமிழ் மகள் செந்துவர்வாயி
லறிவித்ததைப்போலே - தமி
ழாட்சியை நாட்டிடக் காட்சியைப் போற்றிட
ஆண் மக்களா ! வருவீர் ! -கூறும்
இந்த உலகிலும் எந்த உலகிலும்
இன்பத் தமிழ் முழங்க - ஒன்றி
எண்ணிப் பரப்பித் தமிழர சோங்கிட
எல்லோருந் தொண்டு செய்வீர் !!! "

" இன்னும் புகன்றிடவோ " எ. இ. பா.

92 என்று புகன்ற வழி !-கண்ணை
இரு கைகளாலும் பிசைந்து விழித்தனன்!
ஏதும் புரிய வில்லை !- " யான்
எவ்விட முள்ளனன் ? " யாது செய்தே "! னென
ஒன்றும் புலப்படாமல் - நின்றேன்
ஓரத்தில் சிறுநீர்க் கப்பறையுந் தண்ணீர்
ஊற்றிக் குடிப்பதற்கே - வைத்த
ஓட்டைத் தகரத்துப் போணியுந் தட்டும்
நன்றிலாக் கம்பளியும் !-தென்னை
நாரினிற் கட்டிய பாயும் ! மண்திண்ணையும் !
நல்லிரும்புக் கதவும்!-அங்கே
நான்கு பக்கத்தையும் சுற்றிச் சுற்றி வந்து
நின்று விளக்காட்டி!- "சிறை
நிலைசரி" யெனும் ஆலீஸ்வெல்" ("All is well")
நீளச் சொல் காவலர்தம்-பேச்சும் [லென
நினைவுறுத்திடச் சிறை கிடப்பதை
நினைந்து வெட்கமுற்றேன்!!

## தமிழ்மக்களுக்கு எனது வேண்டுகோள்

என்றாலும், என் அன்புடைத் தமிழ் மக்களே!

அன்று யான் (''நல்ல இளம்பருவம்!'' என்ற இசையில் பாடுக.)

93 கண்ட கனவாலே!-பெருங்
கவலை! சூழ்ந்திடவே
கொண்ட எண்ணங்களுக்கே!-எண்ணினம்!
கூற முடிந்திடுமோ!
உண்டைப்புழுச் சோறும்!-மண்மேல்
ஓடுந் தழைச் சாறும்!
உண்ட வயிற்றினிலே!-மெத்த
உந்தும் எரிவு கொண்டேன்!
துண்டு துண்டெண்ணங்களும்!-பல்கித்
தொடர்பே ரெண்ணங்களும்!
மண்டை மூளையைத்தின்றே! - என்னை!
வாட்டி வதைத்தனவே!

94 பண்டைத் தமிழர்கள்தம் பெருமை!
''பாரதத்தாய்'' பெயரால்!
''தொண்டுரிமை'' பெயரால்!-''காந்தி
சொல்லிய'' தென்பதனால்!
மண்டு ''மதப்'' பெயரால்!-''கதர்''
''மகாத்துமாப்'' பெயரால்!
சண்டாளர் இந்தியினால்!-பார்ப்பார்
சங்கீத சபைகளால்!-
தண்டும் பல ''நிதி''யால்!-பல
தாசிப் பிள்ளைகளால்!-
மண்டையில் மூளையின்றி!-பெட்டி
''மஞ்ச''ளாய்ப் பார்த்திட்ட தால்!

95 எண்டிசையாளுஞ் செய்தித்-தாளோ
டெழுதுகோல் கைவிட்டதால்!
கண்ட விடமெல்லாம்!-பார்ப்பனக்
''காப்பிக் கிளப்''புளதால்!

குண்டர் குறும்பு கண்டும்!-தமிழர்
கொள்ளுங் "கருணை"யினுல்!
பண்டம் பணங்கொடுத்து-வீழ்ந்து
பணியும் பேதைமையால்!
அண்டிப் பிழைப்பதற்காய்க்-கொண்ட
ஆரியப் பித்ததனுல்!
பண்டிதர்கள் புளுகால்!-நன்மை!!
பறிமுத லாதல் கண்டும்!!!

96 உண்டு இளைப்பாரி!-தங்கள்
ஒய்யாரம் பேசி நிற்கும்!
கண்டு மொழிப் புலவர்!-'தமிழ்க்
காவியப் பேரறிஞர்!-"
பெண்டிர் தம் கூட்டத்திலே!-கதை
பேசித் திரிபவர்கள்!
உண்டி பெரிதெனவே!-நச்சி
ஒத்தூதிப் பேசுபவர்!
"மண்டுகள்!" "அறிவிலிகள்!" என்று!
மாற்ருன்! உரைத்தல் கண்டும்!!
"தொண்டர்களாய்க் கிடந்து!!-பார்ப்பனத்
தொண்டு செய்யுந் "தமிழர்"!!!

97 எண்ணம்! மொழி! திரும்பி!-அவர்
இழைக்குஞ் செயல் திரும்பி!
வண்ணத் தமிழ்!-தமிழர் - நலம்
வாழ நினைப்பாரோ ???
மண்ணிலே மற்ற மக்கள்!—தம்மவர்
வாழப் பணி புரிதல்!
கண்ணிலே கண்டபின்னும்-தமிழர்!
காட்சியற்றுத் திரிதல்!
புண்ணுக்கிடமென்பதைத்-தமிழர்!
புரிந்துணர்ச்சிகொண்டு!
பண்ணுலவுந் தமிழின்-அரசைப்
பாரெங்கும் நாட்டுவரோ???

ஆதலால் எனதன்பும் உயிருமாய தமிழ் மக்களே!—
தமிழ்த் தாய்மார்களே!—இளைஞரே!—இளம்பெண்மணிகளே!
"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்" என்ற இசையில் பாடுக.

98 காதற் கண்மணி சொல்லிய வண்ணம்!
காட்சியற்ற வழக்கங்கள் நீக்கி,
மாதர்கட் குரிமைகள் அளித்து
மக்களுக்கு நற்கல்வி கொடுத்தே
ஆதரிக்கும் தமிழரின் ஆட்சியை
ஆண்மையோடு நடத்திடுவோமே!
ஏதமற்றுத் தமிழரெல்லோரும்
எட்டுத்திக்கையும் வென்றிடுவோமே!

99 கோதிலாப் பழந் தமிழர்களோடு
கூடி ஒற்றுமை யாய்விடுவீரே!
பேதைமையறும் இவ்வறத் தொண்டால்!
பெண்களுந் துணை நின்று வெல்வீரே!
"காதற் கோயிலாம்!" டாசுமால்! போலென்
காதலிக்கொரு "கோயில்" நான் கட்ட
போதிய துணை யாவும் செய்வீரே!
புத்துணர்வுடைத் தமிழரே!! நீரே!!! "தமிழ் மகன்"

100 ஆகவே, தமிழர்களாகிய எல்லோரும் தமிழர் கொள்கைக்காக நமது இனிய தமிழ்மொழி காப்புக்காக தமிழராட்சிக்காக தமிழர் வாழ்வுக்காக உயிருங் கொடுத்துக் காத்து வளர்த்து நமதினிய தமிழை வாழ்த்துவோமாக!

### தமிழர் கொள்கை வாழ்த்து
இங்கிலீஷ் நோட் பாண்டு இசை

1 வாழ்க தமிழர் கொள்கை! வாழ்க வாழ்கவே!
வீழ்க மனுக் கொள்கை வீழ்க வீழ்கவே. (வாழ்க)

2 சூழ்க அறம்! அன்பு! கடமை எங்குமே
தூயதமிழர் வீரம்! ஆண்மை! தோன்ற யாண்டுமே!
ஆழ்க அடிமை எண்ணம்! ஆழ்க மாய்கவே!
அறிவிலாமை, தெளிவிலாமை மாய்க மாய்கவே! (வாழ்க)

3 மனிதர் தம்மில் "உயர்வு தாழ்வு" கற்பனை செய்து!
"மற்றமக்கள் தங்களுக்கே அடிமையா"மென்று!
புனிதமற்ற "கொள்கை" "நூல்கள்" புனைந்தெழுதியே!
புளுகிப்பிழைக்கும் வஞ்சநெஞ்சர் பொன்ற பொன்றவே!
(வாழ்க)

4 "மத"ப்பித்து! "சாதிப்"பித்து! மடிய மடியவே!
மக்களை ஏமாற்றிப் பிழைக்குங் கூட்டமழியவே!
"கதை, கடவுள், மோட்ச"மென்று காசு பறித்திடும்!
கலகக்காரர் செய்யுஞ் சூழ்ச்சி! ஒழிய ஒழியவே!
(வாழ்க)

5 காந்தி, கதர், "ராமராஜ்யம்!" அரிஜனமென்று
கல்வியற்ற மக்கள் கண்ணில் மண்ணைத்தூவியே
தாந்தம் வகுப்பும் ஆட்சி கொள்ளச் செய்யுந் தந்திரம்!
தலையெடாது தொலைக! தறுகண் தமிழர் வாழ்கவே!
(வாழ்க)

6 நாடெலாந் தமிழ் முழங்க! நன்மையோங்கவே!
நவநவத் தமிழ் நூல்கள்! நாளுந் தோன்றவே!
மேடெலாந் திருத்திப் பயிர் செய்து வாழ்கவே!
"வேதம்! பூதம்!" என்று ஏய்ப்போர் வீழ்க! வீழ்கவே!
(வாழ்க)

7 அன்னையாகும் பெண்மை உரிமை யடைந்து வாழ்கவே!
அடிமை, கொடுமை, மூடத்தன்மை தொலைக!
தொலைகவே!
மன்னுந் தமிழராட்சி எங்கும் மலர்க! மலர்கவே!!
மானமுள்ள தமிழர் கூட்டம்! பெருக!! பெருகவே!!!

வாழ்க தமிழர் கோள்கை!

குடியேற்றம்: மு. அண்ணல்தங்கோ.

Printed at The Guardian Press, 21, Anderson St., Madras.